Persatuan Pengguna Pulau Pinang
Consumers Association of Penang
槟城消费人协会 பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
10 Jalan Masjid Negeri, 11600 Pulau Pinang, Malaysia
Tel: 604-8299511 Fax: 604-8298109
email: consumerofpenang@gmail.com

Websites
Bahasa:
www.pengguna.org.my
English:
www.consumer.org.my
Chinese:
www.cap.org.my

பத்திரிகைச் செய்தி 14.10.2020

# தண்ணீர் மூலங்களை தகர்த்து விடாதீர்
# பினாங்கு பயனீட்டாளர் சங்கம் வேண்டுகோள்

---

கெடா, ஊலு மூடா வனப்பகுதியில் மரங்கள் வெட்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று மாநில அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ள பினாங்கு தண்ணீர் வாரியத்தின் தலைமை அதிகாரி டத்தோ ஜசேனி மைடீன்சாவின் கூற்றினை பினாங்கு பயனீட்டாளர் சங்கம் வரவேற்பதாக அதன் தலைவர் முகைதீன் அப்துல் காதீர் கூறினார்.

பினாங்கு, கெடா, பெர்லிஸ் ஆகிய மாநிலங்களுக்கான தண்ணீர் ஊலு மூடா ஆற்றிலிருந்து பெறப்படுகின்ற காரணத்தால் இங்குள்ள வனப்பகுதியில் மரங்கள் வெட்டப்படுவது எப்படி ஊலு மூடா ஆற்றுக்கு எதிர்மறையான பாதிப்புகளை உண்டாக்கும் என்றும், 4.2 மில்லியன் மக்களுக்கான தண்ணீர் தேவையை எந்த அளவுக்கு அது பாதிக்கும் என்றும் அவர் தெளிவாகக் கூறியுள்ளார். அவருடைய அறிக்கையைப் படிக்காதவர்கள் அதை அவசியம் படிக்க வேண்டும். ஏன் ஊலு மூடா காட்டில் மரங்கள் வெட்டப்படுவது பொதுமக்களைப் பாதிக்கும் என்று அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

உலகம் முழுவதும் நிலவி வரும் புவி வெப்பம் நம்முடைய வறட்சிக் காலத்தை இன்னும் கடுமையாக்கி நம்முடைய அணைகளில் தண்ணீர் அளவை பாதித்துள்ளது. உதாரணத்திற்கு, 24.8.2020ல் குறைவான மழையின் காரணமாக தெலுக் பாஹாங்கில் தண்ணீரின் அளவு 52 நாட்களுக்கு மட்டுமே போதியதாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. அதோடு பினாங்கில் நல்ல மழையாக இருந்தாலும் கூட தெலுக் பாஹாங்கின் நீர் அளவு 22.6 விழுக்காடு மட்டுமே. இது வழக்கத்தை விட மிகவும் குறைவான அளவாகும் என்று பினாங்கு தண்ணீர் வாரியத்தின் தலைமை அதிகாரி கூறியிருந்தார். இயற்கை தண்ணீர் பிடிப்பு பகுதிகள் ஏன் தேவை மற்றும் அவை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கு இதுவே தக்க சான்றாகும்.

அதனோடு ஊலு மூடா வனப்பகுதியில் மேற்கொள்ளப்படும் மரவெட்டு நடவடிக்கைகள் ஊலு மூடா ஆற்றில் தூய்மைக்கேட்டினை ஏற்படுத்தும்

என்பதையும் டத்தோ ஜசேனியின் அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. சிலாங்கூரில் நிகழ்ந்த இரு நீர் தூய்மைக்கேட்டு சம்பவங்களினால் நிறைய குடும்பங்களில் பல நாட்களுக்குத் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதை நாம் மறந்துவிடக்கூடாது.  இது போன்ற நிலை ஊலு மூடா ஆற்றுக்கும் ஏற்பட்டு பிறகு 3 மாநிலங்களில் உள்ள 4.2 மில்லியன் மக்களையும் அது பாதித்துவிடக் கூடாது.

ஆகையால் டத்தோ ஜசேனியின் இந்த அறிக்கை மத்திய அரசாங்கத்தின் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு, ஊலு மூடா காட்டுப் பகுதியின் மரவெட்டு நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்று பினாங்கு பயனீட்டாளர் சங்கம் கேட்டுக்கொள்வதாக பினாங்கு பயனீட்டாளர் சங்கத் தலைவர் எஸ்.எம்.முகம்மது இத்ரிஸ் கூறினார்.

முகைதீன் அப்துல் காதீர்
தலைவர்
பினாங்கு பயனீட்டாளர் சங்கம்